நகராட்சி நிர்வாக ஆணையாளர் அலுவலகம், சென்னை – 5.

# சுற்றறிக்கை

ந.க.எண் 254/98/எச்2 நாள் 2.1.1998

பொருள்: பணிக்குழு – பணியிடை அகால மரணமடைந்த நகராட்சிப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கக் கோரும்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகளும் அனுப்ப வேண்டியச் சான்றுகளும் குறித்த அறிவுரை வழங்கப்படுகிறது.

பார்வை: அரசு ஆணை (பல்வகை) எண் 86, நகராட்சி நிர்வா நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 3.4.93.

2. இவ்வலுவலகச் சுற்றறிக்கை நக எண் 98903/93/எச்2 நாள் 17.12.1993

3. இவ்வலுவலகச் சுற்றறிக்கை ந.க.எண் 7482/94/எச்2 நாள் 23.6.95

4. அரசு ஆணை (நிலை) எண் 175, ந.நி.கு.வ. துறை நாள் 5.9.95

5. அரசு கடித எண் 39924/ஆ1/95 வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் துறை நாள் 11.10.95.

...

நகராட்சிகளில் பணியிடை மரணமடைந்த

பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணையில் நகராட்சி ஊழியர்களின் வாரிசுகளுக்கு ஊழியர் மரணமடைந்த நாளினை அடிப்படையாகக் கொண்டு ஒருமுகப்படுத்தி முன்னுரிமையின் அடிப்படையில் நகராட்சிகளில் கருணை அடிப்படையில் நகர் மன்றங்களின் மூலமே நியமனம் செய்யும் வகையில் நகர் மன்றங்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையரால் பரிந்துரை செய்யுமாறு அதிகார ஒப்படைப்பு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் நகராட்சிகளில் பணியிடை மரணமடைந்த ஊழியர்களின் வாரிசுகளுக்கு பணி வழங்கப் பரிந்துரை செய்யும் பொருட்டு, விண்ணப்பங்கள் நகராட்சி ஆணையர்களின் மூலம் பெறப்பட்டு நகராட்சிகளின் நிர்வாக ஆணையரால் பரிசீலனை செய்யப்பட்டு, பணியிடம் காலியாக உள்ள நகராட்சியின் நகர மன்றத்தின் மூலம் நியமனம் செய்யப்படும் விதத்தில் தகுதியானவர்பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டு வருகிறது.

கருணை அடிப்படையில் பணி வழங்கக் கோரும் விண்ணப்பங்கள் நகராட்சி ஆணையர்களின் மூலம் நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளருக்கு அனுப்பப்படும் போது அவை முழு வடிவில் அனுப்பப்படாததால் அவற்றின் மீது உரிய வரையறுக்கப்பட்ட விபரங்களை அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர்களிடம் கேட்டு பெறப்பட்ட பிறகே அவற்றினை பரிசீலித்து நகராட்சி நிர்வாக ஆணையரால் நகர் மன்றங்களுக்கு நியமனம் செய்யப்படும் வகையில் பரிந்துரை செய்யப்பட்டு வருகிறது. இதனால் பணிக்காலத்தில் மரணமடைந்த ஊழியர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் அரசால் வரையறுக்கப்பட்ட காலவரம்பிற்குள் பணி வழங்கப்படாமல் பணி வழங்குவதில் சில நிர்வாகச் சிக்கல்களும், வீண் காலதாமதமும் ஏற்படுகிறது. எனவே, வீண் கால தாமதத்தினைத் தவிர்க்கும் பொருட்டு, இனி கருணை அடிப்படையில் பணி வழங்கக் கோரும் விண்ணப்பத்துடன் கீழ்க்காணும்

விபரங்களை பணி காலத்தில் மரணமடைந்த ஒரு மாத காலத்திற்குள் எழுத்து மூலமான அறிவிப்பினை நகராட்சி ஆணையரால் பதிவு அஞ்சலில் (அரசு கடித எண் 2941/அ1/94-1) தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை நாள் 1,3.94ன்படி மரணமடைந்த ஊழியரின் குடும்பத்திற்கு தெரிவித்து அவற்றினைப் பெற்று அசலுடன் ஒப்பிட்டு சரிபார்த்து அதை பரிசீலனைச் செய்து நகராட்சி ஆணையரின் குறிப்பிரையுடன் முறையாக மேலனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

<u>கருணை அடிப்படையில் பணி வழங்கக் கோரும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டிய சான்றுகள்:</u>

1. மறைந்த பணியாளரின் வாரிசிடமிருந்து கருணை அடிப்படையில் பணி வழங்கக் கோரும் விண்ணப்பம்.
2. மறைந்த பணியாளரின் இறப்புச் சான்று.
3. பணி நியமனம் கோருபவரின் கல்வித் தகுதிச் சான்று
4. பணி நியமனம் கோருபவரின் பிறந்த நாள் சான்று
5. அசையும், அசையா சொத்து குறித்த வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழ் - சொத்து உண்டெனில் அதிலிருந்து கிடைக்கப் பெறும் ஆண்டு வருவாய் குறித்த சான்றிதழ்.
6. பிற வருமானம் உண்டெனில் அது குறித்த வட்டாட்சியரின் சான்றிதழ்
7. குடும்ப வருமானம் போதுமானதாக இல்லை எனவும் குடும்பம் வறுமை <u>நிலையில்</u> உள்ளது என்பதற்கும் வட்டாட்சியரின் சான்றிதழ்.
8. வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட வாரிசு சான்றிதழ்.
9. பிற வாரிசுகளின் தடையில்லா சான்றிதழ் (அவருக்குப் பணி நியமனம் செய்ய தங்களுக்கு தடையேதுமில்லை என்கிற சான்றிதழ் ஒவ்வொருவரிடமிருந்தும் தனித் தனியாகப் பெறப்படல் வேண்டும்.
10. குடும்பத்தில் வேறு எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரியவில்லை என்பதற்கான வட்டாட்சியரின் சான்றிதழ்.
11. படிவம் 17 (பணியாளர் பணிபுரிந்த அலுவலகத்தின் தலைவர் அவர்களின் சான்றொப்பத்துடன் (ஆணையரின் கையொப்பம்)
12. அரசாணை எண் 29 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நாள் 7.8.83ல் குறிப்பிடப்பட்டுள்ள உறுதி மொழி.

மேலும் அரசாணை எண் 120 தொழிலாளர் மற்றும் வேலை-வாய்ப்புத் துறை நாள் 26.6.95ல் ஆணையிடப்பட்டுள்ள அரசு ஊழியர்கள் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள் அவரது வாரிசுகள் கருணை அடிப்படையில் நியமனம் கோரி விண்ணப்பம் என்ற நிபந்தனை 26.6.95க்கு முன்னர் இறந்த அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு பொருந்தாது. இருப்பினும் அத்தகைய பழைய நேர்வுகளில் ஊழியர் இறந்து பல ஆண்டுகள் கழித்து கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரும் பொழுது அவற்றை நன்கு கூர்ந்தாய்வு செய்யாமல் அப்படியே ஏற்கக் கூடாது. ஊழியர் இறக்கும் பொழுது அவருடைய வாரிசுகள் சிறு வயதினராக இருந்து அவர்கள் பள்ளி இறுதி அல்லது மேல்நிலைப்பள்ளி முடித்த உடனேயே பணி நியமனம் கோரும் பட்சத்தில், அத்தகைய நேர்வுகளில் கருணை அடிப்படையில் நியமனம் பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகளை நிறைவு செய்யும் அவர்களுக்கு கருணை அடிப்படையில் நியமனம் அளிக்கலாம். மாறாக பள்ளி இறுதி வகுப்பு படித்து மேல்நிலைக் கல்வியையும் முடித்து பிஏ/பிஎஸ்சி/பி.இ./எம்.பி.பி.எஸ். போன்ற உயர்கல்வியையும் பயின்று அதன் பின்னர் நியமனம் கோரினால் குடும்பம் வறிய நிலையில் இல்லை என முடிவு செய்து அத்தகையோர்

விண்ணப்பங்களை ஏற்க வேண்டியதில்லை எனக் கருதலாம் (அரசு கடித எண் 8375/கூ1/97-1 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 28.2.1997).

தினக் கூலி மற்றும் பகுதி நேரப் பணியாளர் சில்லரைச் செலவினப் பணியாளர், தற்காலிகப் பணியாளர்கள் மற்றும் பணிவரன்முறை செய்யப்படாமல் பணியிடை மரணமடைந்த ஊழியர்களின் வாரிசுகளுக்கும் ஏற்கனவே கருணை அடிப்படையில் ஒருவருக்கு பணி வழங்கப்பட்டு பிறகு அதே குடும்பத்தில் மீண்டும் வேறு ஒருவருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க விதிகளில் இடமில்லாமல் உள்ளதால் இதுபோன்ற நேர்வுகளில் எவ்வித வழுவலும் ஏற்படாமல் மனுதாரர்களிடமிருந்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். கருணை அடிப்படையில் பணியமர்வு செய்யப்படுபவர்கள் அரசு ஆணை (பல்வகை) எண் 1130, வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் துறை நாள் 9.7.97ன்படி நிலையான வேலைக்கு அமர்த்தப்பட்டவராகவே கருதல் வேண்டும்.

மேற்கண்டும் விபரங்களைச் சரிபார்த்து பரிசீலனைச் செய்து பெறப்பட்ட விண்ணப்பங்களை எவ்வித காலதாமதமின்றி அரசால் வரையறுக்கப்பட்டுள்ள கால வரம்பிற்குள் இவ்வலுவலகத்திற்கு அரசாணையின்படி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமே அனுப்பி வைக்குமாறு அனைத்து நகராட்சி ஆணையர்களையும் அறிவுறுத்தப்படுகிறது.

இச் சுற்றிக்கையினைப் பெற்றுக் கொண்டமைக்கான ஏற்பளிப்பினை மறு தபாலில் அனுப்பி வைக்குமாறும் கோரப்படுகிறது.

(ஒம்) வெ. பிச்சை
நகராட்சி நிர்வாக ஆணையாளருக்காக

பெறுநர்:

1. நகராட்சி ஆணையர்கள்
2. மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்

நகல்: உதிரிக் கோப்பிற்கு

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்